


# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், ஆகஸ்ட் 17.2021

மலர்:08 இதழ்:05

## தமிழக முதல்வராக பதவியேற்றபின் கோட்டையில் முதல்முறையாக

# மு.க.ஸ்டாலின் தேசிய கொடி ஏற்றினார்

### பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்களை வழங்கி கவுரவித்தார்



நாட்டின் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வராக பதவி ஏற்ற பின்னர் சென்னை கோட்டையில் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றினார். சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி, தியாகிகள் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவித்தார். நாட்டின் 75 வது சுதந்திர தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைப்பதற்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. காலை 8 மணி முதலே நிகழ்ச்சியில் பங்கேற்க எம்.பிக்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி, நீதிபதிகள், அரசு மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினர்.சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தேசிய கொடி ஏற்றுவதற்காக தனது இல்லத்தில் இருந்து புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலினை, போர் நினைவுச் சின்னத்தில் இருந்து அவரது காரின் முன்னும் பின்னும் சென்னை காவல்துறையினர் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ விழா நடைபெறும் இடத்திற்கு அழைத்து வந்தனர் சரியாக காலை 8.48 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்திற்கு வந்தார். அவரை அரசு தலைமை செயலாளர் இறையன்பு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.பின்னர், தென்னிந்திய பகுதிகளின் ராணுவ தலைமைப் பணியாளர் அதிகாரி மேஜர் ஜெனரல் பிரகாஷ் சந்திரா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை ரியர் அட்மிரல் புனீட் சதா, வி.எஸ்.எம், தாம்பரம் வான்படை அதிகாரி ஏர் கமாண்டர் விபுல் சிங், கடலோரக் காவல்படை கிழக்கு மண்டல இன்ஸ்பெக்டர் ஜெனரல் எ.பி.படோலா, காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால், கூடுதல் காவல்துறை இயக்குனர் சட்டம் மற்றும் ஒழுங்கு தாமரைக்கண்ணன் ஆகியோரை மரபுப்படி முதலமைச்சருக்கு தலைமை செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார்.இதை தொடர்ந்து, காலை 8.50 மணிக்கு காவல்துறையின் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். அப்போது, முதலமைச்சர் திறந்த ஜீப்பில் காவல்துறையின் அணிவகுப்பை பார்வையிட்டார். சரியாக 9 மணியளவில் காவல்துறையின் கூட்டுக்குழல் இசை முழங்க, முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தின உரையாற்றினார். நானூறு ஆண்டுகள் பழமை கொண்ட கோட்டையின் பெருமையையும் மாட்சிமையையும் குறிப்பிட்டு, அங்கு விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்தார். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடியேற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்தான் கலைஞர் என்னும் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்தார். மாநில அரசால் விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயில் இருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். சுதந்திர தின விழாவை முன்னிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்களை வழங்கி கவுரவித்தார். பின்னர், விருது பெற்றவர்கள் மற்றும் கொரோனா தடுப்பு வீரர்களுடன் முதல்வர் ஸ்டாலின் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

## ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தை கைப்பற்றியது தலிபான்



ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் நுழைந்த நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது தலிபான். தலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்றியதால் அமெரிக்கர்களை மீட்டு வருகிறது அந்நாட்டு ராணுவம். அதேபோல், ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காபூல் தூதரகத்தில் இருந்து அமெரிக்க அதிகாரிகள் ஹெலிகாப்டர்கள் மூலம் வெளியேறியதாக தகவல் கூறுகின்றன. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற்ற நிலையில், ஆப்கானிஸ்தானில் பெரும்பாலான இடங்களை தலிபான்கள் கைப்பற்றியது. இந்த நிலையில் 15/08/2021 தலைநகர் காபூலையும் தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் அதிகாரத்தையும் கைப்பற்றியது. அரசுப் படைகள் முற்றிலும் சரணடைந்ததால் தலிபான்கள் அதிகாரத்தை முழுமையாக கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசின் தலைவராக முன்னாள் உள்துறை அமைச்சர் அலி அகமது ஜலாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

20 ஆண்டுகளுக்கு பிறகு ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சி அமைக்கிறது தலிபான், இதனிடையே, ஆப்கானிஸ்தானில் சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்க அரசுப் படைகளுக்கு அதிபர் அஷ்ரஃப் கனி அறிவுறுத்திய நிலையில், அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், தலிபான்களுடன் பேசி அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்திற்கு ஏற்பாடுகள் நடந்து வருவதாக தகவல் கூறுகின்றன. இந்த நிலையில், ஆப்கானை விட்டு எப்படியாவது வெளியேற வேண்டும் என்ற நோக்கத்தில் நகரப் பேருந்துகளுக்கு முண்டியடிப்பது போல் பலர் விமானத்தில் ஏற முயற்சிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட சில சம்பவங்களின் வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் வெளியான ஒரு வீடியோவில், விமானத்தின் வெளிப்புறத்தில் தொங்கியபடி நாட்டை விட்டுத் தப்பிக்க முயன்ற இருவர் நடுவானிலிருந்து கீழே விழும் காட்சிகள் பதைபதைப்பை ஏற்படுத்தியுள்ளனகாபூலில் விமான நிலையத்திலிருந்து அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று புறப்பட்டது. அந்த விமானத்தில் பயணிக்க முடியாத மக்கள் விமானத்தைப் பின் தொடர்ந்தனர். இதில், இருவர் விமானத்தின் சக்கரத்தில் தொங்கியபடி பயணம் மேற்கொண்டனர். விமானம் உயரே பறந்த நிலையில், பிடிமானத்தை இழந்த இருவர், வானிலிருந்து கீழ் குடியிருப்பு பகுதிகளில் விழுந்துள்ளார். இந்த வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ காட்சிகள் உலக மக்களைக் கண்ணீர் சிந்த வைத்துள்ளது.

இதே போன்று, மற்றொரு விமானத்தின் மீது பேருந்தில் அமர்வது போல் விமானத்தின் மேல் கூரையில் மக்கள் அமர்ந்திருக்கும் காட்சிகளும் வெளியாகியுள்ளது. இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களைப் பாதுகாப்பாகத் தாய் நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கையில் முனைப்புக் காட்டி வருகின்றன . ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்தாலும், தலைநகரில் உள்ள காபூல் விமான நிலையம் அமெரிக்கப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளின் பார்வை ஆப்கானிஸ்தான் பக்கம் திரும்பியுள்ள போதும். தங்களைக் காக்க எந்த நாட்டினராவது உதவ மாட்டார்களா என்ற ஏக்கத்துடன் காத்துக் கொண்டிருக்கின்றனர் ஆப்கான் மக்கள்.

### ஐ.நா.வேண்டுகோள்




ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு உலக நாடுகளுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திமுக அளித்த அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின்



மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் முதல் பட்ஜெட் கடந்த ஆகஸ்ட் 13 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. இதில், நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் நிதி நிலை பட்ஜெட் தாக்கல் செய்தார். இதைத்தொடர்ந்து 14 ம் தேதி சட்டசபை வரலாற்றில் முதல்முறையாக வேளாண் துறைக்கு தனி பட்ஜெட்டை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இதில், பனை தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.இந்நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் பதிலளித்து பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் எ வ வேலு, ஆட்சிக்கு வந்து நூறு நாட்கள் தான் ஆகிறது.தொடரின் வது நாள் அமர்வு தொடங்கியது. இதில், திண்டிவனம் ராமமூர்த்தி, அய்யாறு வாண்டையார் உள்ளிட்ட மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 9 பேருக்கு இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டது. மேலும், ஸ்டேன் சுவாமி, வே. ஆனைமுத்து, ஆதீனம், மருத்துவர் காமேஸ்வரன், தமிழறிஞர் இளங்குமரனார் உள்ளிட்டோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இதையடுத்து, திமுக அளித்த வாக்குறுதிகள் நிலை குறித்து எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பிய நிலையில், அவற்றிற்கு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட அனைத்தும் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்றார். சொல்வதை செய்வோம், செய்வதை சொல்வோம், சொல்லாததையும் செய்வோம் அதுதான் திமுக அரசு என கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ பெரியசாமி கூறினார். இல்லத்தரசிகள் அனைவரும் ஆயிரம் வழங்கும் திட்டம் ஏழையானவர்களுக்கு மட்டுமல்ல, தகுதி வாய்ந்த அனைவருக்கும் வழங்கப்படும் என உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி குறிப்பிட்டர். தொடர்ந்து பேசிய முதலமைச்சர் ஸ்டாலின், திமுக அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என உறுதியளித்தார்



# தமிழக பட்ஜெட் 2021 எந்தெந்த துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு?



1) தமிழ் வளர்ச்சித்துறைக்கு ரூ80.26 கோடி ஒதுக்கீடு
2) தொல்லியல் துறைக்கு ரூ29.43 கோடி ஒதுக்கீடு
3) காவல்துறைக்கு 8.9 கோடி நிதி ஒதுக்கீடு
4) நீதித்துறை நிர்வாகத்துக்கு ரூ 1,713 கோடி ஒதுக்கீடு
5) மீன்வளத் துறைக்கு ரூ .303 கோடி ஒதுக்கீடு
6) குடிசை மாற்று வாரியத்துக்கு ரூ 3,954 கோடி ஒதுக்கீடு
7) நெடுஞ்சாலைத்துறைக்கு ரூ.17.899 கோடி ஒதுக்கீடு.
8) மின்சாரத்துறைக்கு ரூ.19,872.77 கோடி ஒதுக்கீடு
9) பள்ளிக்கல்விக்கு ரூ.32,599.54 கோடி ஒதுக்கீடு
10 உயர்கல்வித்துறைக்கு ரூ. 5,369 கோடி ஒதுக்கீடு
11) சுற்றுலாத்துறைக்கு ரூ. 187 கோடி ஒதுக்கீடு
12 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒட்டு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4,142 கோடியாக உயர்வு.
13) காலநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தடுப்பு நடவடிக்கையில் தனிக்கவனம் செலுத்துவதற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு.
14) விளையாட்டு மேம்பாட்டிற்கு ரூ.225 கோடி ஒதுக்கீடு.
15) மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.18,933 கோடி ஒதுக்கீடு.

# மதுரை ஆதீனம் காலமானார்



சுவாசக் கோளாறால் மதுரை அப்போலோவில் சிகிச்சைப் பெற்று வந்த மதுரை ஆதினம் வயது 77 13/08/2021 அன்று காலமானார். மதுரை ஆதீனத்தின் 292 வது குருமகா சன்னிதானமான அருணகிரிநாதர் ஆகஸ்ட் 9 ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் உயிர் பிரிந்தது. தமிழகத்தில் உள்ள மிகப் பழமையான சைவ திருமடங்களில் ஒன்று மதுரை ஆதீனம். தமிழ்த் தொண்டு, ஆன்மீகத் தொண்டு மற்றும் சமூகப் பணிகளில் மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் ஈடுபட்டு வந்தார். மதுரை ஆதீனத்திற்குரிய மூன்று கோயில்கள் தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ளன. சைவமும், தமிழும் இரு கண்கள் என்று வாழ்ந்த பெருமைக்குரியவர் மதுரை ஆதீனம், தான் சரி என்று நினைக்கக் கூடிய அரசியல், சமூக கருத்துகளையும் முன் வைத்தவர். முன்னாள் முதலமைச்சர்கள் கலைஞர், ஜெயலலிதாவுடன் நட்பு பாராட்டி வந்தவர் மதுரை ஆதீனம்.

## ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளுக்கு அடுத்தாண்டு முதல் தடை-மத்திய அரசு அறிவிப்பு!



சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதால் பிளாஸ்டிக்கை தடை செய்யவேண்டும் என நீண்டநாட்களாக கோரிக்கை எழுந்து வந்தநிலையில் அடுத்தாண்டு ஜூலை ஒன்றாம் தேதி முதல் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை, உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்யவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பைகளுக்கான தடிமன் அளவை 50 லிருந்து 120 மைக்ரான்களாக உயர்த்தப்படுவதாகவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே 50 மைக்ரான் தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதைய அறிவிப்பின் மூலம் 120 மைக்ரானுக்கு குறைவாக தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கு தடை வரவுள்ளது. இந்த தடை இரண்டு கட்டங்களாக அமலாகவுள்ளது. இந்தாண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி முதல் 75 மைக்ரான்களுக்கு குறைவான தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கும், அடுத்தாண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை 120 மைக்ரானுக்கு குறைவாக தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகளுக்கும் தடை அமலாக உள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு






# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969




# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## சுதந்திர தின விழா மாவட்ட ஆட்சியர் லலிதா தேசியக் கொடியை ஏற்றினார்





மயிலாடுதுறை (ராஜன் தோட்டம்) சாய் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 75வது சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா.,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செய்தார்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜி.சுகுணா சிங் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் தீரு.சோ.முருகதாஸ் உள்ளனர்.

## 70 பயனாளிகளுக்கு ரூ.4 3/4 லட்சம் நலத்திட்ட உதவிகள்









மயிலாடுதுறையில் நடந்த சுதந்திர தின விழாவில் 70 பயனாளிகளுக்கு ரூ 4 லட்சம் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் லலிதா வழங்கினார். மயிலாடுதுறை மாவட்டத்தில் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் சாய் விளையாட்டு அரங்கத்தில் நடந்தது. விழாவில் மாவட்ட கலெக்டர் லலிதா தேசியக்கொடியை ஏற்றி வைத்து. போலீசாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மயிலாடுதுறை போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வம் உட்பட 17 போலீசாருக்கும் 54 அரசு அலுவலர்களுக்கும் 91 டாக்டர்களுக்கும். ஒரு தொண்டு நிறுவனத்திற்கும் என மொத்தம் 163 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை கலெக்டர் வழங்கினார். தொடர்ந்து வருவாய்த்துறையில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 26 படை வீரர்கள் நலத்துறை நபர்களுக்கு ரூ26 ஆயிரம் மதிப்பில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை பெறுவதற்கான ஆணையும் 17 பேருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையும் 5 நபர்களுக்கு ரூ 50 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டாவிற்கான ஆணையும், வேளாண்மைத்துறை சார்பில் சிறந்த விவசாயிகளுக்கான விருதாக தலா ரூ. 10 ஆயிரம் வீதம் 5 நபர்களுக்கு 50 ஆயிரத்துக்கான காசோலையும், தோட்டக்கலை துறை சார்பில் 15 நபர்களுக்கு ரூ.3 லட்சத்து ஆயிரத்து 174 மதிப்பில் மரக்கன்றுகளும், முன்னாள்சார்பில் 2 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.50 ஆயிரம் மதிப்பிலான காசோலையும் என மொத்தம் 70 பயனாளிகளுக்கு ரூ 4 லட்சத்து 70 ஆயிரத்து 174 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுகுணாசிங், மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலர் முருகதாஸ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் முருகன், வருவாய் கோட்டாட்சியர்கள் பாலாஜி, நாராயணன் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள், தாசில்தார்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


ஓலை 13 | ஓசை 50 | ஆகஸ்ட் 2021




தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை


## மயிலாடுதுறை: கைப்பதிப்புப் மூலம் தேசியக் கொடி

## 5 ம் வகுப்பு மாணவன் சாதனை





மயிலாடுதுறை அருகே 3 மணிநேரம் 15 நிமிடம் 31 விநாடிகளில் 4 ஆயிரத்து 440 தடைதன் கைரேகைப்பதிப்பின் மூலம் தேசிய கொடியை வரைந்து ஹர்ஷித் சாதனை படைத்துள்ளார். மயிலாடுதுறையில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு தனியார் பள்ளி மாணவர் 600 சதுரஅடி அளவில் தன் கைப்பதிப்பு மூலம் மூவர்ண தேசிய கொடியை வரைந்து சாதனை படைத்துள்ளார்.

மயிலாடுதுறை மறையூரில் உள்ள தனியார் பள்ளியில் 5 ம் வகுப்பு பயிலும் மாணவர் ஹர்ஷித், இந்த மாணவன் 75 வது சுதந்திர தினத்தில் சாதனை படைக்க வேண்டுமென்ற நோக்கில் வெர்ட்ச்யூ புக் ஆப் வேல்டு ரேக்கார்டு அமைப்பினர் முன்னிலையில் 600 சதுரஅடி பரப்பளவு உள்ள திரையில் இந்திய தேசிய மூவர்ணக்கொடியை கைபதிப்பு ஓவியம் வரைந்து சாதனை படைத்துள்ளார். அக்ரலிக் பெயிண்ட் மூலம் 3 மணிநேரம் 15 நிமிடம் 31 விநாடிகளில் 4 ஆயிரத்து 440 தடவை தன் கைரேகைப்பதிப்பின் மூலம் தேசிய கொடியை வரைந்து சாதனை படைத்த மாணவருக்கு வேல்டு ரேக்கார்டு அமைப்பின் இயக்குனர் சுரேஷ்குமார் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கி பாராட்டினர். பள்ளியில் சேர்ந்தபோது சுதந்திர தினத்தன்று மாணவனின் பெற்றோர் மூவர்ணக்கொடியை நெற்றியில் திலகமிட்டுள்ளனர். சுதந்திரதினத்தை பற்றி தெரிந்துகொண்ட மாணவன் மூவர்ணக்கொடியை தினந்தோறும் நெற்றியில் திலகமிட்டு வருவதாகவும் சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தால் இந்த சாதனை முயற்சியை மேற்கொண்டதாகவும் பாரதபிரதமர் ஆக வேண்டும் என்பதே தன் லட்சியம் என்றும் தெரிவித்தார்.

# பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் 75 வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்






மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் பள்ளி கல்லூரி மற்றும் அரசு அலுவலங்களில் 75 வது சுதந்திர தின விழா ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. செம்பனார்கோவிலில் உள்ள பூம்புகார் தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் 75 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம் முருகன் கலந்துகொண்டு தேசிய கொடிஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.

இதைத்தொடர்ந்து செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் கலந்துகண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னதாக எம்எல்ஏ நிவேத முருகன் கலந்துகொண்டு 75 வது சுதந்திர தின கொடி கம்ப கல்வெட்டை திறந்து வைத்து சிறப்பாக பணியாற்றிய அலுவலக ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஊராட்சி செயலர்களுக்கு நினைவுப் பரிசுகள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கி பேசினார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் மஞ்சுளா, வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சிகள் திருமலை கண்ணன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பாஸ்கர் நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன் ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், அப்துல்மாலிக், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல் செம்பனார்கோவில் கலைமகள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 75 வது சுதந்திர தின விழாவில் நிர்வாக இயக்குனர் என். எஸ். குடியரசு கலந்துகொண்டு தேசிய கொடி ஏற்றி வைத்து பேசினார் உடன் பள்ளி தலைமையாசிரியர் ஆசிரியர்கள் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தரங்கம்பாடி பிஷப் ஜான்சன் நினைவு மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜான் சைமன் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார் இதில் ஆசிரியர்கள் உள்ளிட்ட அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். பொறையார் சர்மிலா காடஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பள்ளி நிர்வாகி பாண்டியராஜன் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ஹரிதரன் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் பொறையார் தரங்கை பேராயர் மாணிக்கம் லுத்தரன் கல்லூரியில் நடைபெற்ற 75 ஆவது சுதந்திர தின விழாவில் கல்லூரி முதல்வர் ஜீன் ஜார்ஜ் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து பேசினார். இதில் துணை முதல்வர்கள் ஜான்சன் ஜெயக்குமார், ஜோயல் எட்வின் ராஜ் உள்ளிட்ட பேராசிரியர்கள் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதேபோல் தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகள், ஊராட்சி மன்ற அலுவலகங்களில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

# மயிலாடுதுறை அருகே 2 மீனவர்கள் காயம்-4படகுகளுக்கு தீ வைப்பு



சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடித்த பைபர் படகு மீது விசைப்படகால் மீனவர்கள் மோதினர். இதில் 2 மீனவர்கள் காயம் அடைந்தனர். இந்த நிலையில் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 4 படகுகளுக்கு மர்ம நபர்கள் தீவைத்தனர். இதனால் அங்கு பதற்றம் நீடிக்கிறது. அங்கு பாதுகாப்பு பணிக்காக போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர். மயிலாடுதுறை மாவட்டம் வானகிரி மீனவர் கிராமத்தில் 500 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வசித்து வருகின்றனர். பைபர் படகுகளும் 50 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும் உள்ளன. இந்த கிராமத்தினர் சுருக்குமடி வலைகள் கொண்டு மீன்பிடிக்க எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று சுருக்குமடி வலைகளை கொண்டு மீன் பிடிக்க பூம்புகார் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். இதனால் பல்வேறு மீனவ கிராமங்களில் பதற்றம் நிலவியது.இந்த நிலையில் வானகிரி மீனவர் கிராமத்தை சேர்ந்த சங்கர் என்பவருடைய பைபர் படகில் அதே ஊரைச்சேர்ந்த சிலம்பரசன் வயது 35 ராமச்சந்திரன் மகன் ராம்குமார் 28 ஆகிய 3 பேரும் வானகிரிக்கு அப்பால் உள்ள கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர்.அப்போது திடீரென வேகமாக வந்த ஒரு விசைப்படகு, இவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்த பைபர் படகு மீது மோதியது. இதன் காரணமாக பைபர் படகு இரண்டாக பிளந்தது. இதனைத்தொடர்ந்து மீன் பிடித்து கொண்டிருந்த 3 மீனவர்களும் கடலில் இருந்து தப்பி கரைக்கு திரும்பினர். இதில் சிலம்பரசன் ராம்குமார் ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இவர்கள் இருவரையும் மற்ற மீனவர்கள் மீட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இதனை அறிந்த சக மீனவர்கள் கடலில் மிதந்து கொண்டிருந்த உடைந்த பைபர் படகை கயிறு கட்டி கரைக்கு இழுத்து வந்தனர்.இதுகுறித்து பூம்புகார் போலீசார் மற்றும் கடலோர காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சுருக்கு மடி வலைகளை கொண்டு மீன்பிடிக்க வானகிரி மீனவர் கிராமத்தினர் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த முன்விரோதம் காரணமாக விசைப்படகு மூலம் பைபர் படகை மோதி சேதப்படுத்தி இருக்கலாம் என இந்த சம்பவத்தை தொடர்ந்து வானகிரி செல்லும் தர்மகுளம் பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் வானகிரி மீனவர் கிராமத்தில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பூம்புகார் காவிரி கடலோடு சங்கமிக்கும் சங்கமத்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த ஒரு பைபர் படகு திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த தீ மள மளவென பரவி அருகில் இருந்த 3 பைப படகுகளுக்கும் பரவியது. இதனால் இந்த தீ விபத்தில் 4 பைபர் படகுகளும் எரிந்து சாம்பலாகின. இதனைத் தொடர்ந்து போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் பூம்புகார் மீனவர் கிராமத்தில் பதற்றம் நிலவுகிறது. இதனால் அங்கு போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தீயில் எரிந்த பைபர் படகுகள், பூம்புகாரை சேர்ந்த ஆரிய செட்டி, ராஜாக்கண்ணு, கந்தவடிவேலு, மதிசந்திரன் ஆகியோருக்கு சொந்தமானது என்பது போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. பூம்புகார் போலீஸ் நிலையத்தில் மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், ஊராட்சி மன்ற தலைவர் சசிகுமார், ஒன்றிய கவுன்சிலர் மதுமிதாரவி ஆகியோரிடம் மயிலாடுதுறை போலீஸ் சூப்பிரண்டு சுகுணாசிங் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது தடை செய்யப்பட்ட வலைகள் கொண்டு மீன்பிடிக்கும் மீனவர் கிராமங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார். இதனை ஏற்ற கிராம பொறுப்பாளர்கள் கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களிடம் தகவல் தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து மீனவர்கள் மீன் பிடிக்காமல் கரைக்கு திரும்பினர். இந்நிலையில் பூம்புகார் மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் 36 விசைப்படகுகளில் தரங்கம்பாடி எல்லை பகுதிக்கு சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடிக்கச் சென்றதாக தகவல் பரவியது. இதனை தடுக்கும் விதமாக தரங்கம்பாடி, சின்னங்குடி, குட்டியாண்டியூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் 200 க்கும் மேற்பட்ட பைபர் படகுகளில் கடலுக்கு சென்று பூம்புகார் மீனவர்களின் விசை படகுகளை சந்திரபாடி பகுதியில் சுற்றி வளைத்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது தவிர தரங்கம்பாடி மற்றும் சந்திரபாடி ஆகிய பகுதிகளில் கரையிலும் ஏராளமான மீனவர்கள் திரண்டனர். இதனால் கடலில் மோதல் ஏற்படும் சூழல் நிலவியது.இதனைத்தொடர்ந்து அங்கு மயிலாடுதுறை போலீஸ் சூப்பிரண்டு சுகுணா சிங் தலைமையில் சீர்காழி போலீஸ் துணை சூப்பிரண்டு லாமேக் முன்னிலையில் ஏராளமான போலீசார் கடலோர பகுதிகளில் குவிக்கப்பட்டனர். வருவாய்த்துறை மற்றும் போலீஸ் அதிகாரிகள் மீனவ கிராம பஞ்சாயத்தார்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார்2 மணி நேரத்திற்கு பின்பு படகுகளில் சென்றவர்கள் கரை திரும்பினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. மீனவர்கள் இடையே பிரச்சினை ஏற்பட்டதை தொடர்ந்து திருச்சி மத்திய மண்டல ஐஜிபாலகிருஷ்ணன் பூம்புகாருக்கு நேற்று மாலை வருகை தந்தார். பூம்புகார் காவல் நிலையத்தில் போலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் மீனவ கிராம பொறுப்பாளர்களிடம் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

# மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் திரவ ஆக்சிஜன் நிரப்பல்-3 வது அலை வந்தால் எதிர்கொள்ள ஆயத்தம்



மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்றால் மூச்சுத்திணறல் ஏற்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 175 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் 10 அவசர சிகிச்சை படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.. ஆக்சிஜன் பற்றாக்குறையை போக்குவதற்காக 6 கேஎல் கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆக்சிஜன் பிளான்ட் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 6 கே.எல். ஆக்சிஜன் நிரப்பப்பட்டால் 600 சிலிண்டர்களில் ஆக்சிஜன் நிரப்ப முடியும் என்பதால் மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையங்களில் ஆக்சிஜன் பற்றாக்குறை இல்லாமல் இருக்க ஆக்சிஜன் பிளாண்ட்டில் உள்ள டேங்க்கை நிரப்பும் பணி நடைபெற்றது. திருச்சியிலிருந்து கொண்டு வரப்பட்ட திரவ ஆக்சிஜனைக் கொண்டு நேற்று நிரப்பப்பட்டது. மேலும் ஆக்சிஜன் கான்ச்ட்ரேட்டர் 200 க்கும் மேற்பட்ட சாதனங்கள் உள்ளன. மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் தேவையான ஆக்சிஜன் கான்சன்ட்ரேட்டர்கள் உள்ளன. மேலும் தேவையான அளவு பல்வேறுநிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு நன்கொடையாக அளித்து வருகின்றன. சென்ற மாதம் மேலும் 20 சாதனங்கள் மயிலாடுதுறை மாவட்ட அலுவலகத்திற்கு வந்துள்ளது. 3 வது அலை வந்தால் அவற்றை சமாளிக்க தேவையான ஆக்சிஜன் கையிருப்பு உள்ளது. அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள புதிய கட்டிடத்தில் குழந்தைகள் அவசர சிகிச்சை படுக்கைகள் 10 அறைகள் ஒதுக்கப்பட்டு ஆக்சிஜன் படுக்கையுடன் தயார் நிலையில் உள்ளது.

# சீர்காழி அருகே நிகழ்ந்த கோர விபத்தில் கர்ப்பிணி உள்பட 3 பேர் பலி



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா கன்னியாகுடி கிராமத்தைச் சேர்ந்தவர் புருஷோத்தமன் 36 இவர் கர்ப்பிணியான தனது மனைவி தமிழ்வாணி 30, என்பவரை பரிசோதனைக்காக வைதீஸ்வரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டு டூவீலரில் வீடு திரும்பியுள்ளார். அப்போது கற்கோயில் உடையாம்பாளையம் என்ற இடத்தில் எதிரே அதிவேகமாக வந்த கார் மோதியதில் கர்ப்பிணியான தமிழ்வாணியும், அவரது கணவர் புருஷோத்தமனும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். தொடர்ந்து வேகமாக சென்ற கார் 100 நாள் வேலை முடித்துவிட்டு சாலையோரம் நடந்து சென்ற உடையாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொன்னையன் மனைவி தையல்நாயகி 52 சந்திரகாசு மனைவி ராணி60 ஆகியோர் மீதும் மோதியது. இதில் இருவரும் பலத்த காயமடைந்தனர். இதனையடுத்து காரை நிறுத்திவிட்டு அதன் டிரைவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். விபத்தை கண்ட அப்பகுதி மக்கள் ஓடி வந்து காயமடைந்த தையல்நாயகி, ராணி ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வழியிலேயே தையல்நாயகி பரிதாபமாக உயிரிழந்தார். ராணி மேல்சிகிச்சைக்காக சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். டிரைவரின் அஜாக்கிரதையால் தறிகெட்டு ஓடிய கார் மோதிய விபத்தில் கர்ப்பிணி பெண், அவரது கணவர் மற்றும் மூதாட்டி உள்ளிட்ட நான்கு உயிர்கள் பறிபோன சம்பவம் சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் விபத்தை ஏற்படுத்திய காரை அடித்து நொறுக்கி குளத்திற்குள் தள்ளிவிட்டனர். இவ்விபத்து குறித்து வைத்தீஸ்வரன் கோவில் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளதுடன், தப்பி ஓடிய கார் டிரைவரையும் தேடி வருகின்றனர்.

# மயிலாடுதுறை அருகே ரூ.7லட்சம் எரிசாயம் அழிப்பு



மயிலாடுதுறை மாவட்டம் பாலையூர் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட கோனேரிராஜபுரம் மாரியம்மன் கோவில் கீழத்தெருவை சேர்ந்த சின்னப்பிள்ளை மற்றும் ராமதுரை ஆகியோரின் வீட்டின் கொல்லைப்புறத்தில் எரிசாராயம் பதுக்கி வைத்து இருப்பதாக மது விலக்கு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் கடந்த ஜனவரி மாதம் 2 ந் தேதி மதுவிலக்கு போலீசார் நடத்திய சோதனையில் பதுக்கி வைத்து இருந்த 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 54 பிளாஸ்டிக் கேன்களில் இருந்த 1,890 லிட்டர் எரிசாராயம் சிக்கியது. அவற்றை மயிலாடுதுறை மதுவிலக்கு போலீசார் கைப்பற்றினர் . இந்த சம்பவம் தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த கோபு மகன்கள் சுதாகரன் வயது 24 சூர்யா 23 சிங்காரு மகன் சுந்தர்ராஜன் 39 புதுச்சேரி மாநிலம் குரும்பகரம் கன்னியம்மன் கோவில் தெருவை சேர்ந்த சுப்பிரமணியன் மகன் அம்பேத்வளவன் என்கிற சுந்தரமூர்த்தி 38 ஆகிய4 பேரை போலீசார் கைது செய்தனர். அப்போது கைப்பற்றப்பட்ட எரி சாராயத்தில் தலா ஒரு லிட்டர்வீதம் 54 கேன்களில் இருந்து மாதிரிக்கு எடுத்து கோர்ட்டு உத்தரவின்படி தஞ்சாவூர் ராசாயன பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டது. மீதம் இருந்த 1, 836 லிட்டர் எரிசாராயத்தை மயிலாடுதுறை 2 வது குற்றவியல் நீதித்துறை நடுவர் அப்துல்கனி மேற்பார்வையிலும், மயிலாடுதுறை மதுவிலக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் சித்ரா முன்னிலையிலும் மதுவிலக்கு போலீசார் எரிசாராயத்தை கீழே கொட்டி அழித்தனர். இந்த எரிசாராயத்தின் மதிப்பு ரூ 7 லட்சம் என கூறப்பட்டது.

## தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில்

# 172 வது ஆம்புலன்ஸ் வழங்கும் நிகழ்ச்சி




தமிழகம் முழுவதும் உள்ள நகரம் மற்றும் கிராம புறங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஆம்புலன்ஸ் வசதி சேவை தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் தொடங்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே உள்ள திருக்களாச்சேரி ஊராட்சியில் ஏழை எளிய மக்கள் என அனைத்து சமுதாய மக்களும் பயன்படுத்தும் வகையில் தமுமுகவின் 175 வது ஆம்புலன்ஸ் தொடங்கப்பட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்களாச்சேரி ஜாமிஆ மஸ்ஜித் நிர்வாக சபை முத்தவல்லி முகமது ரபிக் சுல்தான் தலைமை வகித்தார். மயிலாடுதுறை பாராளமன்ற உறுப்பினர் இராமலிங்கம், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமுமுக முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் முகமது காசிம் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மாநிலத் தலைவரும் பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும்மான எம்எச். ஜவாஹிருல்லாஹ் கலந்து கொண்டு திருக்களாச்சேரியை சேர்ந்த மெ.மு முகம்மது சுல்தான் குடும்பத்தார்கள் சார்பில் வழங்கப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனத்தை அனைத்து சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கி பேசினார். நிகழ்ச்சியில் செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல்மாலிக், ஊராட்சி மன்ற தலைவர் சம்சாத் ரபிக்இ வட்டார சுகாதார மருத்துவ அலுவலர் கார்த்திக் சந்திரகுமார்இ சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சித்திக், ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாநில செயலாளர் அப்துல் ரஹீம், மருத்துவ சேவை அணி மாநில செயலாளர் கிதர் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். பின்னர் இதில் கலந்து கொண்ட தமுமுகவின் மாநில தலைவர் ஜவஹிருல்லாஹ் ஆம்புலன்ஸ் வசதியை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர்தமிழ்நாட்டின் நிதி நிலை குறித்து நிதித்துறை அமைச்சர் பழனிவேல்ராஜன் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கை மிகவும் கவலை தரக்கூடியதாக உள்ளது என தெரிவித்தார். கடந்த 20 ஆண்டுகளாக மிக மோசமான நிதி நிர்வாகத்தை அதிமுக அரசு தந்திருப்பதற்கு வெள்ளை அறிக்கையே சான்று எனக் கூறினார். அதிமுக மற்றும் அதன் தோழமை கட்சிகள் திமுகவை விமர்சிப்பதற்கு காரணம் அவர்களின் நிர்வாக சீர்கேடு பல்வேறு தரவுகளுடன் வெளிப்பட்டுவிட்டது என்ற உண்மையை மறைப்பதற்காக தான் குற்றச்சாட்டுகளை அவர்கள் கூறி வருகின்றனர் எனவும்கடந்த அதிமுக ஆட்சியில் உள்ளாட்சித் துறை இமின்சாரத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் எப்படிப்பட்ட முறைகேடுகள் நடைபெற்றன என்பது பற்றி சட்டமன்றத்தில் உள்ள தலைமை தணிக்கை ஆணையாளர் தெளிவான அறிக்கையை சமர்ப்பித்து உள்ளதாகவும் கூறினார்கொரோனா காலகட்டத்திலும் கூட கடந்த அதிமுக ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை மக்களுடைய நிதிகளை எல்லாம் எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக கூறினார். ஆதாரங்களின் அடிப்படையில் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் ஒன்றும் தவறில்லை எனவும் அந்த வகையில்தான் இன்று உள்ளாட்சித் துறையில் ஊழல் செய்த முன்னாள் அமைச்சர் வீட்டில் சோதனை நடைபெற்றதாகவும் தெரிவித்தார் . நீட் தேர்வை ரத்து செய்யவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நிச்சயமாக ரத்து செய்யப்படும் என தெரிவித்தார்

## சீர்காழியில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள்கள் பறிமுதல் 3 பேர் கைது!




சீர்காழியில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள்களை புதன்கிழமை பறிமுதல் செய்த போலீஸார் 2 பேரை கைது செய்தனர். சீர்காழி ரயிலடி அருகே தடைசெய்யப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில், சிறப்பு தனிப்படை உதவி ஆய்வாளர்கள் அறிவழகன், பாலசந்திரன் மற்றும் சீர்காழி உதவி ஆய்வாளர் லோகநாதன் ஆகியோர் அங்கு சோதனை நடத்தினார்.அப்போது சாக்குமூட்டையுடன் நின்ற 3 பேரை பிடித்து விசாரித்ததில், மூட்டையில் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள்கள் சுமார் 46 கிலோ இருந்தது தெரியவந்தது. அதைப் பறிமுதல் செய்த போலீஸார், சோழசக்கரநல்லூர் உளுத்துக்குப்பை பகுதியை சேர்த ஆசாத் அலி வைத்தீஸ்வரன்கோயில் வடக்கு தெரு பாபு 44 சீர்காழி தாடாளன் தெற்கு மடவிளாகம் சுப்பிரமணியன் 46 ஆகியோரை கைது செய்தனர்

## மீனவர்களின் மீன்பிடிப்பு முறையில் உள்ள மோதலைத் தவிர்க்க நடவடிக்கை!

# சீமான் கோரிக்கை



நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்களின் மீன்பிடிப்பு முறையில் உள்ள மோதலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் . , கடலில் மீன்பிடிப்பதில் ஏற்பட்டுள்ள முரண்கள் தொடர்பாக நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்களிடம் எழுந்திருக்கும் மோதல் போக்கும், நிகழ்ந்தேறிய வன்முறையும் பெரும் அதிர்ச்சியளிக்கிறது. மத்தியில் ஆளும் பாஜக அரசு மீன்வளச் சட்ட வரைவை அவசரகதியில் நிறைவேற்றத்துடிக்கும் இக்கொடுஞ்சூழலில், அதற்கெதிராக மீனவ மக்கள் ஓரணியில் திரள வேண்டிய தேவையிருக்கையில், நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் மீன்பிடிப்பில் உள்ள பிரச்சினைகளால் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்ளும் செய்தியறிந்து பெரும் கவலையடைந்தேன். எத்தகைய சிக்கலையும் தீர்த்திடப் பேச்சு வார்த்தையையும், சனநாயகப்பூர்வமான அணுகுமுறைகளையும் பின்பற்றுவதுதான் உகந்ததாக இருக்குமே ஒழிய, ஒருவரையொருவர் தாக்கும் வன்முறைப்பாதையைத் தேர்வு செய்வதல்ல; பிரித்தாளும் சூழ்ச்சி எனும் உட்பகை வளர்க்கும் ஆயுதம் கொண்டே வரலாறு நெடுகிலும் தமிழர்கள் வீழ்த்தப்பட்டிருக்கும் வேளையில் நடைபெறும் இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் வேதனையளிக்கின்றன. நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களைச் சேர்ந்த கிராம மீனவர்கள் ஒற்றுமையின் பலமாக இருந்த்து, தற்போது அவை தகர்க்கப்பட்டு, மீன்பிடிப்புக் காரணமாக நடுக்கடலில் இரு தரப்பினருக்கிடையேயும் கடும் மோதல் நிகழ்ந்திருப்பது மீனவர்களின் ஓர்மை குறித்தான பெரும் அச்சத்தைத் தருகிறது. தமிழக மீனவர்கள் மீது கொலைவெறிச்செயலில் ஈடுபடும் சிங்களப்பேரினவாத அரசின் தொடர் அத்துமீறல்களையும், கொடும் வதைகளையும் எதிர்த்துக்களம் காண்கையில், உள்நாட்டு மீனவர்களிடையே உருவாகியிருக்கும் பூசலும், பிளவும் நம்மைப் பின்னோக்கி இழுத்துச்செல்லும் வரலாற்றுப் பெருங்கொடுமையாகும் . மீனவர்களிடையே எழுந்திருக்கும் இத்தகைய குழு மனப்பான்மையும், இரட்டை நிலைப்பாடும் பெரும் வன்முறையாக மாறக்கூடுமென்பதால் நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மீனவக்கிராம மக்கள் அதீதக் கலக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். பல மாதங்களாக இப்பிரச்சினைகள் இருந்துவரும் நிலையில் கொடுமையான சட்டத்திட்டங்கள் மூலம் மீனவ மக்களிடம் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கும் அரசின் வன்செயல் கடும் கண்டனத்திற்குரியது . ஆகவே, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு அரசு உடனடியாகத் தலையிட்டு, நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்களின் கருத்து வேற்றுமையைக் களைந்து, அவர்களை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டு வரவும் , மீனவர்களிடையேயான பிளவைச் சரிசெய்து இணக்கமான போக்கை உருவாக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## வைத்தீஸ்வரன்கோவில்: வீடுகளுக்குள் வெள்ள நீர் புகாமல் இருக்க வடிகாலை தூர்வார பொதுமக்கள் கோரிக்கை..!



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த வைத்தீஸ்வரன் கோவிலில் கோவிலார் வடிகால் ஆறு உள்ளது. பத்துக்கும் மேற்பட்ட கிராமங்ளை சேர்ந்த 2280 ஏக்கர் விளைநிலங்களுக்கு பிரதான வடிகாலாகவும், வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சியில் உள்ள 2000 குடியிருப்புகளுக்கு வடிகாலாகவும் இந்த கோவிலார் வடிகால் ஆறு இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பெய்த கனமழையின் போது ஆற்றில் புதர்கள் மண்டியும், ஆக்கிரமிப்புகளும் இருந்ததால் இந்த வடிகாலில் தண்ணீர் செல்ல முடியாமல் 1000 ஏக்கர் சம்பா சாகுபடியும் 500 க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் வெள்ளநீர் புகுந்து பெரிய அளவில் பாதிக்கபட்டது. இதுபோன்ற பாதிப்புகளின் போது மட்டுமே ஆற்றை தற்காலிகமாக தூர்வாரி தண்ணீரை அப்புறபடுத்திய பொதுப்பணிதுறையினர் அதன் பின்னர் கோவிலார் வடிகாலை முழுமையாக தூர்வாரவில்லை. இதனால் ஆற்றின் மேற்கு பகுதி முழுவதும் ஆகாயதாமரை, செடி கொடிகள் அதிகளவில் வளர்ந்து காடு போல் காட்சியளிக்கிறது. இந்த சூழலில் மேட்டூர் அணையில் கடந்த ஜீன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு நிலையில் மழையும் அவ்வப்போது பொழிந்து வருகிறது. ஆனால் கோவிலார் வடிகால் ஆற்றிலோ தண்ணீர் வடிய வழியில்லாமல் கோரைப்புல், ஆகாய தாமரை காடு போல் வளர்ந்துள்ளது. அதிக மழை வந்தால் உபரிநீர் வடிகால் செல்லாமல் விவசாயமும் குடியிருப்புகளும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மழைக்காலம் தொடங்கும் முன்பாக கோவிலார் வடிகால் ஆற்றில் ஆக்கிரமைப்புகளை அகற்றியு தூர்வாரி சீரமைக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மயிலாடுதுறை மாவட்டத்தில் சுமார் 80 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வரும் நிலையில் வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளில் பெரும்பாலும் காவிரி நீரை நம்பாமல் நிலத்தடி நீரை மட்டுமே வைத்து ஆண்டுதோறும் விவசாயம் செய்து வருகின்றனர். இந்த சூழலில் தங்களுக்கு தொடர்ந்து ஆண்டுதோறும் வாய்க்கால் முறையாக தூர் வாராமல் மழை வெள்ளத்தால் நெற்பயிர்கள் முழுவதுமாக மூழ்கி வெள்ள நீர் முறையாக வடிய வடிகால் இன்றி பெரும் இழப்புகளை சந்தித்து வருவது வாங்க வேதனை தெரிவித்துள்ள விவசாயிகள் தற்போது புதிதாக ஆட்சி அமைந்துள்ள அரசு விவசாயிகளின் பாதிப்புகளை கருத்தில் கொண்டு மழைக்காலம் தொடங்கும் முன் போர்க்கால அடிப்படையில் வாய்க்காலில் உள்ள செடி கொடிகளையும் ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விடுத்துள்ளனர்.

### முன்பதிவு இல்லாத தொடர் வண்டிகளை இயக்க வலியுறுத்தி

# பயணிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்



கொரோனா நடவடிக்கை காரணமாக முன்பதிவில்லாத ரயில்களை ரயில்வே துறை நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக மயிலாடுதுறையில் இருந்து வேலை நிமித்தமாக தஞ்சாவூர் திருச்சி கும்பகோணம் திருவாரூர்இ நாகப்பட்டிணம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகளை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். திருச்சி மண்டலத்தில் மயிலாடுதுறை நாகப்பட்டினம் காரைக்கால் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் 2 2 பாசஞ்சர் ரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளது. இவற்றை மீண்டும் இயக்க உத்தரவிடக் கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ள நிலையில்இ இது குறித்து பதிலளிக்குமாறு தெற்கு ரயில்வேக்கு மதுரை உயர் நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டு இருந்தது இந்நிலையில்இ மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ரயில்வே நிலையம் முன்பு கொரோனா காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து முன்பதிவு இல்லாத தொடர் வண்டிகளை இயக்க வலியுறுத்தி ரயில்வே தொடர் வண்டி பயணிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பயணிகள் சங்க தலைவர் மெயில் சங்கர் தலைமையில் நடைபெற்றது. முதலில் செயலாளர் தமிழன் கணேசன் வரவேற்புரை ஆற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர் முரளிதரன் ரிட்டயர்டு துணை கலெக்டர் மகாலிங்கம் வழக்கறிஞர் சிவச்சந்திரன் மற்றும் வர்த்தக சங்கத்தினர் ஜெயின் சங்கத்தினர் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கத்தினர் ஏராளமான பொதுமக்களுடன் கலந்து கொண்டு தொடர்வண்டியை இயக்க வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்ட முடிவில் பயணிகள் சங்க கௌரவத் தலைவர் சின்ன கலைஞர் நன்றியுரையாற்றினார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969